# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 55/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மணிமேகலை | நாள் | 03.01.2024 |
| கணவர் பெயர் | பெருமாள் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

13) தாவா A-செட்யூல் சொத்துக்களை பொறுத்து இந்நீதிமன்றத்தில் என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 தான செட்டில்மெண்ட் ஆவணம் என் மாமனார் சீரங்கனால் என்னை காப்பாளராக நியமித்து என் மகன்கள் பெயரில் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

14) மேற்படி வா.சா.ஆ.6 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் தான் தாவாவின் நான் A-அயிட்ட சொத்தாக காண்பித்துள்ளேனா என்றால், அனைத்து சொத்துக்களையும் சேர்த்துதான் காண்பித்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.6 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில், என் மீதி நிலத்திற்கும் கிழக்கு, கிழமேல் நகராட்சி நடைபாதைக்கும் தெற்கு, தென்வடல் நகராட்சி வீதிக்கும் மேற்கு, பொதுசந்திற்கும் வடக்கு எனதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

15) என் வழக்குரை சொத்து விவரத்தில் தாவா A-அயிட்ட சொத்தாக "டி.எஸ்.நெ.6/1 நிலத்திற்கும் கிழக்கு, 'பி' செட்டியுல் தாவா சொத்திற்கும் மேற்கு, டி.,எஸ்.நெ.9 பொது சந்திற்கும் வடக்கு, பிளாக் -15 ல் உள்ள கிழமேல் நகராட்சி பாதைக்கு தெற்கு" என்றுதான் செக்குபந்தி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விவரமும், என் வழக்குரை A-அட்டவணை சொத்திற்கான சொத்து விவரமும் மாறுபட்டுள்ளது என்றால், சரியல்ல.

16) வா.சா.ஆ.6 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் மீதி நிலத்திற்கும் கிழக்கு, என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள நிலத்திற்கு மேற்குபுறமாக என் மாமனாருக்கு நிலம் இருந்திருக்க வேண்டுமென்றால், சரிதான். ஆனால் மேற்படி நிலத்தையும் என் மாமனார் பின்னிட்டு, என் கணவருக்கு எழுதிகொடுத்துவிட்டார்.

17) அவ்வாறு என் கணவர் பெயரில் என் மாமனார் எழுதிகொடுத்ததாக நான் சொல்லும் ஆவணம் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. என் வழக்கறிஞரிடம் கேட்கவேண்டும். என் கணவர் பெயரில், என் மாமனார் எழுதிகொடுத்ததாக நான் சொல்லும் மேற்படி சொத்துதான் இவ்வழக்கில் நான் B–செட்டியூலாக காண்பித்துள்ள சொத்து என்றால், சரிதான். ஆனால் என் வழக்குரையிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் தாவா B–செட்டியூல் சொத்து எனக்கு அனுபவ அடிப்படையில் பாத்தியப்பட்டது என நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.